**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண். 553/2015**

**06.06.2022 வா.சா.1 திரு. மைக்கேல்**

**சாட்சி விசாரணைக்கு அழைக்கப்பட்டு அனுமதியுடன் முதல் விசாரணை தொடர்ச்சி:**

16.12.1910 தேதியிட்டு சுப்பன் பெயருக்கு ஏற்பட்ட கிரைய ஆவணத்தின் சார் பதிவக நகல் வா.சா.ஆ.14 ஆகும். 07.08.1911 தேதியிட்டு வள்ளி என்பவர் பெயருக்கு ஏற்பட்ட கிரைய ஆவணத்தின் சார் பதிவக நகல் வா.சா.ஆ.15 ஆகும். 14.12.1932 தேதியிட்டு அன்னம்மாள் என்பவர் பெயருக்கு ஏற்பட்ட கிரைய ஆவணத்தின் சார் பதிவக நகல் வா.சா.ஆ.16 ஆகும். 11.12.1975 தேதியிட்டு ராமசுப்பம்மாள் என்பவர் பெயருக்கு ஏற்பட்ட கிரைய ஆவணத்தின் சார் பதிவக நகல் வா.சா.ஆ.17 ஆகும். 14.07.2012 தேதியிட்ட கடிதம் மற்றும் 'அ' பதிவேட்டு நகல் வா.சா.ஆ.18 ஆகும். 06.05.2011 தேதியிட்ட தற்போதைய 'அ' பதிவேட்டு நகல் வா.சா.ஆ.19. 13.10.2009 தேதியிட்ட கடிதம் மற்றும் துாய அடங்கல் தொகுப்பு வா.சா.ஆ.20. (ஒளி நகல் என்பதால் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது). 28.09.2017 தேதியிட்ட கடிதம் மற்றும் புல எண். 108, 104 புல வரைபடத்தின் நகல் வா.சா.ஆ.21 ஆகும். 24.08.2016 தேதியிட்டு எனக்கு வந்த கடிதத்தின் அசல் வா.சா.ஆ.22 ஆகும். 07.01.2011 தேதியிட்ட கடிதம் மற்றும் 5 தாள்கள் வா.சா.ஆ.23. (ஒளி நகல் என்பதால் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது).

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**